செய்தித் தாளாகப் பதிவு பெற்றது. வெள்ளிக்கிழமைதோறும் வெளிவருவது

உ
சிவமயம்

# இந்துசாதனம்

சைவபரிபாலன சபை வெளியீடு. பிரதி விலை: சதம் 15

ஆரம்பம்: விரோதி ஞு (1889) ஆவணிமீ 28-ம் உ அச்சகம்: சைவப்பிரகாச அச்சியந்திரசாலை, 450 காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 356

புத்- அச] யாழ்ப்பாணம்- பரிதாபி ஞு ஆனி மீ கப உ வெள்ளிக்கிழமை (23-6-1972) [இல: கக

# திருமுறைவிழாவும் பிரியாவிடை வைபவமும்

## சைவத் திருமுறைகள்

திரு. R. கந்தையா B. A. அவர்கள்
(இளைப்பாறிய அதிபர், கொக்குவில்)

வேதங்களை 'எழுதாமறை' எனப் போற்றிய நமது சமயப் பெருமக்கள் அவற்றை இறைவனருளிய மறைகளாகவே போற்றிப் பயிலும்படி நம்மையெல்லாம் பணித்து அருளினர். இறைவனது திருவருள் பெற்று நமது சைவசமயப் பெருமக்கள் இனிய தமிழாற் பாடிய சைவத் திருமுறைகளை 'எழுதுமறை' எனப்போற்றி வந்துள்ளனர். 'வண்டமிழால் எழுதுமறை மொழிந்த பிரான்' எனத் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகளைப் பெரியபுராணம் போற்றுவதைக் காண்கின்றோம். இதை இடைவிடாது நினைந்து நினைந்து, உணர்ந்து உணர்ந்து, ஊற்றுஎழுங் கண்ணீரதனால் உடம்பு நனைந்து நனைந்து, தம்முணர்வின்றி இறைவன் திருவருள் நின்று அருளிச்செய்த பாடல்களாக கி. பி. இரண்டாம் நூற்றூண்டு தொடக்கம் பன்னிரண்டாம் நூற்றூண்டு வரை வளர்ந்த இப்பாடல்கள் சைவ சமயத்திற்குப் பெரும் அரணாக இன்றும் விளங்குகின்றன - என்றும் விளங்கும்.

வேதங்கள் உலகிலே மனிதன் நல்ல வாழ்வுவாழ வழி காட்டிய உத்தமப்பனுவல்களாகவும், இறைமையை மக்கள் ஒருவாறு வகைவகுத்த திறமையுடையனவாகவும் விளங்குகின்றன. தமிழ்மக்கள் செய்த தவப்பயனாக வந்த திருமூலர், காரைக்காலம்மையார், திருஞானசம்பந்த சுவாமிகள், திருநாவுக்கரசு சுவாமிகள், சுந்தரமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள் போன்ற பெருமக்கள் தமிழ நாட்டிலே திருவவதாரஞ் செய்து, இறைவனது திருவருளால் தாம்பெற்ற இன்பத்தை உலகம்பெற்றுய்யும் படியாகத் திருமுறைச் செல்வங்களை அள்ளி வழங்கியுள்ளார்கள். அவையே சைவத் திருமுறைகளாகும்.

மக்கள் அறிய வேண்டிய பொருள்களையெல்லாம் நன்கு அறிவுறுத்திக் கூறி நன்னெறி வாழவும், மண்ணில் நல்லவண்ணம் வாழ்ந்து காலம் வாழக்கூடிய வழிகளையெல்லாம் வகைப்படுத்தி, நெறிப்படுத்திப் பாடுவோரையும், பாடக்கேட்போரையும் இறைவனுடைய உணர்வில், நினைவில் வாழச் செய்யும் ஆற்றல் படைத்த 'திருமுறைகள்' என்ற செல்வத்தை வழங்கிப்போந்துள்ளார்கள். சமய நூல்களாகவும், இலக்கிய நூல்களாகவும், இசை நூல்களாவும் வாழ வகுக்கும் அறிவுக்கருவூலங்களாகவும், திருமுறைகள் விளங்குவதைக் காணுகின்றோம் பன்னிரண்டு திருமுறைகளாக வகுத்ததோடல்லாமல், இசையமைத்துப் பண்களை வகுத்துக் கொடுத்தும் அழியாப் புகழ்பெற்ற தமிழ்ப் பேரரசன் இராஜ அபயகுலசேகரசோழ மகாராஜனையும், நம்பியாண்டார் நம்பியையும், திருநாரையூர்ப் பொல்லாப் பிள்ளையாரையும் சைவத்தமிழ மக்கள் ஒருபொழுதும் மறக்கமுடியாது.

தேவாரத் திருப்பதிகங்களைப் பண்முறையுடன் கோவில்களில் ஓதுவார்கள் மூலமாகப் பரப்பிவந்த நமது மன்னர்களையும் பிரபுக்களையும், பெரியோர்களையும் நாம் மறந்து போக முடியாது. தஞ்சைப் பெரிய கோயில் போன்ற பெரிய கோயில்களில் ஓதுவார்களுக்கெனப் பிரத்தியேக மான்யம் வழங்கப்பட்டதாக அறிகிறோம். நமது திருக்கோயில்கள் மூலமாகத் திருமுறைகளைப் பரப்பிவந்தனர். திருப்பணிகள் குறையக் குறையத்தான் சைவமும் தங்நிலையைகுன்றியதெனக் கூறலாம். சோழப்பெருமன்னர்கள் பலரும், பிற்காலப் பாண்டியர்களும் சைவத் திருமுறைகளைத் திருக்கோயில்களில் முறைப்படி ஓதுவித்தாக அறிகிறோம். தேவார முதலியவைகளுக்குத் திருக்கோவில்களில் வழிபாடுகளும், திருவிழாச் சிறப்புகளும இருந்ததாகவும் அறிகிறோம். இவை சரித்திரமாயிற்று.

இன்று நமது திருக்கோயில்களில் திருமுறைகளை யாரும் ஓதலாம் என்ற நிலைமைகளைக் காண்கின்றோம். கோயில்களில் அர்ச்சகர்களுக்கு அடுத்தபடியாகப் பண்ணுடன் தேவாரத் திருமுறைகளை ஓதக்கூடிய ஓதுவார்கள் நியமிக்கப்படல் சைவத் தமிழ் வளர்ச்சிக்கு மிகவும் இன்றியமையாதது. திருமுறைகளின் பண்களை மாற்றிப் பாடுதல் தகாது. கண்டபடி தேவாரங்களை நமது திருக்கோயில்களில் பாடாமல் முறைப்படி பாராயணஞ் செய்யக்கூடிய வல்லுனர்கள் மூலம இத் தொண்டு பரப்பப்படல் இன்றியமையாதது. சைவத் திருமுறைகள் நமது வேதம் என்பதைச் சைவத் தமிழ்மக்கள்

வளர்ச்சி 2-ஆம்பக்கம்)

உ
திருச்சிற்றம்பலம்

பாதம் பணிவார்கள் பெறுபண்டம் மதுபணியாய்
ஆதன் பொருளானே னறிவில்லேனருளாளா
தாதார் பெண்ணைத் தென்பால் வெண்ணெய் நல்லூரருட்டுறையுள்
ஆதியுனக் காளாயினி யல்லேனெனலாமே.

திருச்சிற்றம்பலம்
- சுந்தரமூர்த்திசுவாமிகள்.

## திருமுறைவிழாவில் பண்ணிசை

நாவலர் ஆச்சிரமமண்டபத்தில் நிகழவிருக்குந்திருமுறைவிழாவில 25-ந் தேதி இரவு 7 மணி முதல் திருமுறைக் கலாநிதி பி. ஏ. எஸ். இராஜசேகரன் அவர்களும் 26-ந் தேதி இரவு 7-30 மணி தொடக்கம் தமிழிசைவாணர், திருமுறைஆசிரியர் (தமிழிசைச் சங்கம், சென்னை) திரு. வே. சோமசுந்தர தேசிகர் அவர்களும் பண்ணிசை விருந்தளிப்பார்கள், வயலின்: திரு. ஆர். இராதாகிருஷ்ணன் அவர்கள. மிருதங்கம திரு. ஐ. சிவபாதம் அவர்கள்.

## பாதயாத்திரை

நயினுதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் இரதோற்சவதீர்த்தோற்சவங்களில கலந்து பஜனை நிகழ்த்தும் நோக்கமாக வருடந்தோறும மேற்படி சபையினர் தேவஸ்தான வித்வான் திருப்பூங்குடி திரு. V.K ஆறுமுகம் அவர்களின் தலைமையில பஜனைப் பாதயாத்திரை நடாத்தி வருகின்றனர். இம்முறை (22-6-72) வியாழக்கிழமை மாலை

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்)

## வைபவமும்

### வண்ணை. நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் கோலாகலமாக நிகழவுள்ளது

யாழ்ப்பாணம், திருமுறைப் பண்ணிசைப் பயிற்சிக் குழு சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் ஆனித் திங்கள் 11, 12, 13 ஆம் நாட்களாகிய (24, 25, 26—6—72) சனி, ஞாயிறு, திங்கட்கிழமைகளில் திருவருட்டுணையுடன் திருமுறை விழாவெடுக்கவும், கடந்த ஐந்தாண்டுகளாக திருமுறைப் பண்ணிசைப் பயிற்சியளித்துவந்த பண்ணிசைச் செல்வர், திருமுறைக் கலாநிதி திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரன் அவர்களுக்கு பிரியாவிடை அளிக்கவும் தீர்மானித்துள்ளது.

24-6-72 சனிக்கிழமை முற்பகல் திருமுறை விழாவிறகுச் சைவபரிபாலன சபைத் தலைவர் திரு த. சோமசுந்தரம் தலைமை வகிப்பார்கள். பிற்பகலுக்கு யாழ் இந்துக்கல்லூரி அதிபர் திரு இ. சபாலிங்கம் தலைமை வகிப்பார்

25-6-72 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் திருமுறை விழாவிற்கு வடமாகாண உதவி அரசாங்க அதிபர் திரு. தி. முருகேசம்பிள்ளையும பிற்பகலவிழாவுக்கு சேக்கிழார் மன்றத்தலைவர் திரு. ம. ஸ்ரீகாந்தா அவர்களும்தலைமைவகிப்பார்கள்.

26-6-72 திங்கட்கிழமை பிற்பகல் 4 மணிக்குச் சான்றிதழ வழங்கலும் பிரியாவிடை வைபவகும் அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் திரு. வீ. சிவசுப்பிர

(வளர்ச்சி 4-ஆம் பக்கம்

நூற்றூண்டு விழாக் கட்டுரை.

## சுவைக்கச் செய்யுள் செய்த துரையப்பாபிள்ளை

### மகாசனக் கல்லூரி நிறுவிய மகான்

— திரு நம. சிவப்பிரகாசம் —

கல்வியிற் பெரியன் கம்பன் என்ற கருத்துறச் சொல்லுவர் நூல்வல்லுநர் கல்விக்களஞ்சியம் அமைத்து எழுத்தறிவித்தும் அறிவிற்கும் தொண்டாற்றியும் வாழ்ந்த பெரியார்களுள் தெல்லி நகர் தந்த கல்விமான் திருவாளர் தெ. அ துரையப்பா பிள்ளை முன்னணியில் நிற்பவர்.

கல்வியைப்போல் ஒருசெல்வமுண்டோ என்று எண்ணி இளமை தொட்டுத் தமது வாழ்க்கையை அவ்வழி வளம்பெறச் செய்த துரையப்பாபிள்ளை அவர்கள் முயற்சி திருவினையாக்கும் என்ற முதுரையை முன் மாதிரியாகக் கொண்டு செயற்றிறன் வாய்ப்பெற்றூர் என்பதைத் தெல்லியம்பதியில் கல்விக் கொடி வானளாவ உயர்ந்துநின்று கலைவளக்காற்றில் அலை அலையாக அசைந்தலவும் அழகினையுடைய மகாசனக் கல்லூரி மக்களுக்கு மாமேருபோன்ற தோற்றத்தாற் காட்டுகின்றது. பலகலைப் பண்பின் நிலயமாக விளங்கும் மகாசனக் கல்லூரி தூயோன் துரையப்பாபிள்ளைக்கு நினைவுச் சின்னமாக நிற்கின்றது பற்பல பெற்றியிற் கற்றமைந்து நாட்டின் உற்ற நண்பர்களாமாறு, மக்களுக்கு வாழ்வு அளிக்கும் கற்பக தருவாமிக்கல்லூரியின வித்து. வித்தையின் தத்துவம்பொதிந்த கருவெனக் காண்பர் கலைஞர்கள்.

(வளர்ச்சி 4-ம் பக்கம்)

சைவ சமயத்தவர்களின் செய்திப் பத்திரிகை

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவர் ஆனினம் வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே சூழ்க வையக முந்துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

பரிதாபிஷூ ஆனி மீ ௧0 ௨ வெள்ளிக்கிழமை [1972]

## திருமுறை விழா

சொற்கோவுந் தோணிபுரத் தோன்றலுமெம் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் — முற்கோலி
வந்திலரே னீறெங்கே மாமறைநூல் தானெங்கே
எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே

சைவத் தெய்வத் திருமுறைகள் பன்னிரண்டு. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனர் பாடிய தேவாரம் மூன்று திருமுறைகள். திருநாவுக்கரசு நாயனர் பாடிய தேவாரம் மூன்று திருமுறைகள். சுந்தரமூர்த்தி நாயனர் பாடிய தேவாரம ஒரு திருமுறையாக மூவர் பாடிய தேவாரம் ஏழு திருமுறைகள் மாணிக்கவாசக சுவாமிகள் பாடிய திருவாசகம், திருக்கோவையார் எட்டாந் திருமுறை. திருமாளிகைத் தேவர், சேந்தனர், கருவூர்த்தேவர் முதலிய நாயன்மார்கள் பாடிய திருவிசைப்பாவும், சேந்தனர் பாடிய திருப்பல்லாண்டும் ஒன்பதாந் திருமுறையாகவும், திருமூலநாயனர் பாடிய திருமந்திரம் பத்தாந் திருமுறையாகவும், சேரமான் பெருமாணயனர், காரைக்காலம்மையார் முதலியவர்கள் பாடிய பிரபந்தங்கள் பதினேராந்திருமுறையாகவும், சேக்கிழார் பாடிய திருத்தொண்டர் புராணம் பன்னிரண்டாந் திருமுறையாகவும் வகுக்கப்பெற்றுள்ளன. இத்திருமுறைகள் சீவத்தன்மை நீங்கிச் சிவத்தன்மையடைந்த தெய்வ நாயன்மார்களால் பாடப்பெற்றவை. புறஇருளைநீக்குகின்ற பன்னிரண்டு சூரியர்களைப்போல மனத்திலுள்ள அகஇருளை ஒட்டுகின்ற சூரியர்களாக விளங்குபவை. இப்பன்னிரண்டு திருமுறைகளும், பண்டைய மறைக்கருத்துக்களையுடையன. ஓதவும் உள்ளவும் உலப்பிலா மகிழ்வைத்தருவன. எண்ணியாங்கு எண்ணியவற்றை எய்துவிப்பன. நூல் சார்த்திப் பார்ப்பார்க்கு உண்மை நுவல்வன. அன்போடு போற்றுவார் அருவினை அறுப்பன. செந்தமிழ் மொழிவளம் கிரம்பியன, இசைநலங்காண்பார்க்கு இனிமை பயப்பன. மக்கட்குப் பிறவியறுத்து வீடுபேற்றையளிப்பன. தத்துவக் கருத்துக்கள் இலைமறைகாய்போல் பொதிந்துள்ளன. இத்தகைய நலன்கள் தமிழ்மொழியின்கண் சைவசமயத்தவர்க்கு அமையப்பெற்றிருப்பதுபோல வேறெந்த மொழியிலுமில்லை. நமது நாட்டிலே தமிழ்மொழியையும், சைவசமயத்தையும் காத்து வருவன இப் பன்னிரு திருமுறைகளே.

அகில இலங்கை இந்துமா மன்றத்தினதும், இலங்கை இந்துக் கலாச்சார சபையினதும் ஆதரவில தமிழ் நாட்டிலிருந்து அழைக்கப்பெற்ற பண்ணிசைச் செல்வர் திருமுறைக் கலாநிதி பி. ஏ. எஸ் இராஜசேகரன் அவர்கள் சென்ற 4½ வருடகாலம யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் மாணவ மாணவிகளுக்கு பன்னிரு திருமுறைகளையும் முறையாக கற்பித்துள்ளனர். தேவாரப் பண்முறைகளையும் கட்டளைப்பேதங்களையும் விளங்கி ஓதும் முறையை இயன்றளவு கற்றுக்கொண்டார்கள் அவர்களை சென்னைத் தமிழிசைக் கலலூரி தேவார இசையாசிரியர் திரு. வே. சோமசுந்தர தேசிகர் அவர்களும், வடமாகாண சங்கீதப் பகுதி வித்தியாதிகாரி திருமதி சரசுவதி வேலாயுதபிள்ளை அவர்களும் பரீட்சித்தார்கள். அவர்களுக்கு 26-6-72 அன்று மேல் மனு நீதிமன்ற நீதியரசர் திரு வீ. சிவசுப்பிரமணியம் அவர்கள் தராதரப் பத்திரங்களை வழங்குவார்கள். முற்கூறிய இரு சபைகளுக்கும் இப்பெரியாரே தலைவருமாவர்.

திருமுறையின் பெருமையினை மக்கள் உணரும் பொருட்டு ஒரு திருமுறை விழாவொன்றினை எடுக்கவும், திருமுறைப் பண்ணிசை பயிற்சியளித்த திருமுறைக் கலாநிதி திரு. பி. ஏ. எஸ். இராஜசேகரன் அவர்களுக்குப் பிரியாவிடை உபசாரமும் அளிக்கவும் அவரிடம கற்ற மாணவ மாணவிகள் தீர்மானித்துள்ளார்கள். ஓதிவைத்தவர்களை கடவுளாக மதித்தல் வேண்டும். அப்பொழுது தான் கற்றவர்கள் கல்வியின் பயனையடைவார்கள். திரு. இராஜசேகரன் அவர்களுக்குப் புரியும் பாராட்டு பன்னிரு திருமுறைகளையும் பாடியருளிய நாயன்மார்களையே சாரும்.

வாழ்க சைவத் தெய்வத் திருமுறைகள்.

## பண்ணிசைக்குரிசில் வாழ்க

( சைவப்புலவர் கதிர். தணிகாசலம் )

அறுசீர் விருத்தம்.

பூரண வாயுளோடும் பொருந்திடு வளங்களோடும்
ஆரண முதவவேத்தும் அருட்பொனம் பலத்தி லாடுங்
காரண முதல்வ னெமமான் கழலடித் துணையா லென்றும்
ஏரண வுறநீ வாழ்க ராஜசேகரனும் வேந்தே.

வேறு

யார் பெற்றார் நின்பேறு.

தில்லை யூரிற் பிறந்தாயே தந்தை தவசி தம்பரனர்
சொல்லும அன்னை ராசம்மை தொடுத்த தவததின் பேருலே
தில்லைக் கூத்தன் சீரிலங்கு தேவாரஞ் சொல் கழகத்தில்
எல்லை யில்லாப் புகழோடு இருந்து பயின்ற உன்போலார்! (1)

வையம் புகழும் நெறியுடையாள் வசந்தா பூங்கை பற்றியனுள்
ஐயன் நெறியில் தவருத அரிய மக்கள இரண்டுற்ருய்
சைவம் இனபத் தமிழென்றும் தழைத்துச் செழிதது
வளர்ந்தோங்க
செய்யும் பணியே பணியாக தினமும் கொண்டாய்
உன் போலாரே! (2)

வேறு

சீருயருந் தண்டபாணி தேசி கன்பால்
செப்பமுறப் பண்பயிறறு தேர்ச்சி பெறறேய்
பாருயரும் பண்ணிசைக்கோர் புலவ னென்னும
பட்டமதை மெய்கண்டார் பரிந்து தந்தார்
சாருயரு மதியண்ணு கூட்டி வைததான்
குலவுதமி ழிசைமணி யெனும் பட்டம் மங்காப்
பேருயரும் கல்யாண சுந்த ரனசீர்
பிறங்கிடுமின் னிசைச் செலவனெனச் சொற்றிட்டான்.

கண்ணெருமுந் நான்குடையோன் கழற்காந் தொண்டர்
கழறிடுபண் ணிசைமணியென் றேத்தி னுர்கள்
நண்ணுபுகழ் ஈழத்து நல்லை மேவும்
ஞானசம் பந்தபீடம் நலகிற ருமே
பண்ணுலவு திருமுறைக் கலா நிதியென் பட்டம்
பனுட்க ளாயுன்றன் பக்கத் துற்றே
பண்ணுரிய முறைப் பயின்றேம் பணிவில் நல்கும்
பண்ணிசைக்கோர் குரிசிலெனும் பட்ட மேற்பாய்.

## சைவத் திருமுறை

1-ம் பக்கத்து வளர்ச்சி

மறந்துவிடாமல். வேதம் ஓதல், ஓதுவித்தல்போலத் திருமுறைகளையும ஓதல் ஓதுவிததல் சைவக் கைங்கரியங்களில் சிறந்ததாக மதித்துப் போற்றுதல் சைவ சமய வளர்ச்சிக்கும் சைவத் தமிழர்களின் வாழ்க்கை மறுமலர்ச்சிக்கும் மிகவும் இன்றியமையாத தென்று கூறிககொள்ள ஆசைப்படுகின்றேம். சைவத்திருமுறைகள் நமது சமயத்தின் உயிர்நாடி என்பதை உணர்ந்து அவற்றைப் போற்றி முறைப்படி வளர்பபோமாக.

ஈழத்தில் சிவப்பணியாற்றிய

## பண்ணிசைக் குடும்பம்

### ஓதுவார் மூர்த்தி திரு P. A. S. R. இன் சேவை, ஈழத்தில் தொடர வேண்டும்

வெள்ளையர் ஆட்சியில் இருந்த தமிழர்க்கும், தற்போதைய தமிழர்க்கும் இடையில் உள்ள ஒற்றுமை, வேற்றுமைகளைக் எண்ணுறுங்கால், தமிழரிடையே தற்போது ஒரு கலைப் புத்துணர்ச்சி ஏற்பட்டுள்ளது என்ற உண்மை புலனுகும்.

இயல், இசை, நாடகம் என்ற மூன்று துறையிலும் ஈடுபாடு ஏற்பட்டுள்ளதையும் அவை சம்பந்தமான கலைகளைக் கறகவேண்டுமென்பதையும் நோக்கித் தமிழர் பெருமிதங் கொள்ளலாம். பழைய பெருங் கலைச்செல்வங்களை வரன் முறையாக பயிலவுந் தலைப்பட்டுவிட்டார்கள்.

இசையை நாம் கருத்திற் கொள்வோம். எம்மிடையே பலர்க்குக் கற்க விருப்பு இருந்தும் கற்பிக்க அவர்க்குப் பிடித்த ஆசானில்லாமையால் கல்லா திருந்தார்கள். (இங்கு கற்பிக்க ஆசிரியர்களே இல்லை எனக் கூறுவதாக எண்ண வேண்டா!) இங்குள்ள சங்கீத விற்பன்னரிடம் கற்றவர்களாலும், இந்தியாவிற் சென்று பயின்று வந்தவர்களாலும், பிறர் மத்தியிலும் சங்கீதம் பயில வேண்டுமென்ற அவா எழுந்தமையாமறிந்து. அவதானித்த உண்மை,

இத் தருணத்திற்றன். இந்தியாவிலிருந்து பண்ணிசைச்செல்வர் திரு பி ஏ. எஸ் இராஜசேகரன் அழைக்கப்பட்டார் எமமிடையே ஏறகனவே இருந்த சங்கீதஞான முடையோரிடத்துக் கறகத் தயங்கினேர்க்கும், இவர் பிடிப்பதற்குக் கிடைத்த

— "ம. க. ச." —

நல்ல "புளியங் கொப்பாக" அமைந்தார். இவர் கடந்த ஐந்து வருடங்களாகப் பல இடங்களில் (ஒரு இடத்திலேயே செய்திருந்தால் விளைவு இன்னும் நன்றுயிருந்திருக்கும்) பண்ணிசை போதித்தனர். தேவாரப் பண்ணிசையிலேயே ஊறிய அவரிடம் கற்ற எல்லாருமே, பண்ணிசையிலே வல்லவர்களாகி விட்டார்கள் என்பதற்கில்லை. இருப்பினும், அவரிடம் தொடர்ந்து, அவரையும் கஷ்டப்பட்டுப் படித்தவர்கள் பலர் போதியளவு ஞானம் பெற்றிருப்பார்கள் என்பதில் ஐயம் இல்லை

வித்துவக் காய்ச்சல் அற்ற சங்கீத பூஷணங்கள், பாடசாலை ஆசிரிய, ஆசிரியைகள், மாணவ, மாணவிகள், வேலை செய்யும் டாக்டர்கள், வேறும பலர் அன்னரிடம் பண்ணிசை பயில முயற்சித்தனர். அவர்களுட் பெரும்பான்மையோர் நல்ல பயனும் பெற்றனர்.

அன்னர் இங்கு நின்றகாலை நிகழ்த்திய கச்சேரிகள் பெரும்பான்மையோரால் போற்றப்பட்டன. அவரது கச்சேரிகள் பெருங் கூட்டங்களைக் கண்டன என்ற உண்மையே அன்னரது ஆற்றலுக்குச் சான்ருகும்.

இச்சேவைகளை அன்னர் தனித்துச் செய்தார் என்ருல் அதுதான் இல்லை. அவரது வாழ்க்கைத் துணைநலமாம் துணைவியார் அவருக்குத் தோளொடு தோளிணைந்து. நேரடியாகப் பயிற்றலில் இறங்காதிருந்தாலும், அவரது சேவைக்கு உயிர் ஊட்டினர் என்ருல் மிகையாகாது.

"குழல் இனிது யாழ் இனிது
எனப தம்மககள்
மழலைச் சொல கேளாதவர்"

என்ற வள்ளுவப் பெருந்தகையின் வாக்குக்குச் சான்ருக அவர்களின் இரு சிறு பெண் குழந்தைகளும் இனிய கதை மொழிவன. அவ் விருவருமே அவர் சேவையை ஆர் முடுக்கியவர்கள் எனபதை எந்த மனவியலாளரும் வலியுறுத்துவர்.

இப் "பண்ணிசைக் குடும்பம்" ஈழம்வந்து சிறந்த சிவத்தொண்டுபுரிந்து 'சிறீலங்காவை' வட்டுப் பிரிகின்றனர் என்ற புதிர் ஒரு பக்கம் இருக்க அன்னர் தம் போதனையை இழக்கும் மாணுக்கர் ஒருபககம இருக்க, நாம் 'அன்னர்க்கும், அவர் தம் துணைவியார்க்கும், கண்ணன செல்வப் பெண்களுக்கும், பெண்ணேர் பாகத்தன், பண்ணர் இன தமிழ் மேட்டு அருள் பாலிப்பான்' என்ற துணிவில் அவர்கட்டு நன்றி கூறித் தற்காலிக பிரியாவிடை பகர்வோம்.

எம் நலம் கருதி, அன்னரை இங்கு மீட்டும் வருவிககச் செய்து. அவர் தொடங்கிய சேவையை பரிபூரணமடைவிக்கச்செய்வது எமமவர் கடமை.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல. M B 10823

1. ஜோக்கீம் அலெக்சாண்டர் செல்வநாயகமும்
2. பெண் நவமும், இருவரும் 17/4, சடற்கரை வீதி, யாழ்ப்பாணம்

—வழக்காளிகள்.

எதிராக

1. வஸ்தியான் வெலிச்சூர் சவரிமுத்துவும்
2. பெண் உருக்குமணி அருளம்மா சவரிமுத்துவும் இருவரும் கொழும்புத்துறை வீதி, சுண்டிககுளி யாழப்பாணம்.

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக கோட்டின் MB 10823-ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ம் ஸு ஆகஸ்ட் ( ஆவணி) மாதம 5 - ஆம் திகதி சனிக்கிழமை (5-7 72) முற் பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: ரூபாய் 11040/-ம்; 19—5 69 தொடக்கம் 10—10 70 வரைக்கும் ரூபாய் 8000/-க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 730—92 சதமும் இதில் 5-3-71 இல் ரூபா 8000/- கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக யாழ்ப்பாணப் பகுதி சுணடிக்குளி கோவிற்பற்று சுண்டிககுளி இறை மாநகர எல்லைக்குள் கொழும்புத்துறை வீதி இறைவரி திருத்திய இலக்கம் 32 இல் ஒரு பகுதியாய் துண்டு B ‘இருப்பையடி வளவு’ம அதிலுள்ள கட்டிடங்களும், 2-8-65ல் உலாந்தா A லாசறஸ் அவர்களால் 1863ம இலக்கத்தில் காட்டப்பட்டபடி வரசச் செய்கை நிலப்பரப்பு3(Lms. V.C ) எல்லை வடக்குறேட்டு, கிழக்கு ஒழுங்கை தெறகு இதே காணியின துண்டு B 2 மேற்கு இதே காணியின் துண்டு A ( வீடு புது இல: 40 )

க சரவணமுத்து
கொமிஷனரும்,
விலைமதிப்பாளரும்

173. குறுசோ வீதி,
சுணடிக்குளி, யாழ்ப்பாணம்
17-6-72. 135, 23-6

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழ: இல. M B 1 344

N. M அமீட் பெண் சேய்னாப்பு M M. சாகீட் பெண் ஜலீலா இருவரும் இல: 55 ஜின்னாஃறோட் யாழ்ப்பாணம். —வழக்காளிகள்

எதிராக

அப்துல் காதர் முகமெட், இல. 64 முஸ்லீம் கொலிச்றோட், வண்ணார்பண்ணை மேற்கு,

—எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11344ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1972 - ஆம் ஆடு ஆடி மீ 12ம் திகதி (12-7-72) புதன்கிழமை முற்பகல் 10-00 மணிதொடக்கம் முறையேஅந்தக் காணிக்குள் நின்று என்னல பிரசுத்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை; ரூபா 6500/- பின ( 28-12-69 ) தொடக்கம 27-7-70 வரை ரூபா 6000/-க்கு 10 வீத வட்டியும் பின் முழுத தொகைக்கும் இறுபடும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 340-50 சதம் இதில் ரூபா 150/- செலவுத் தொகையாகக் கொடுபட்டது.

ஆதன விபரம்

வடமாகாணம யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென் மேறகிறை பாட்டிசன் உறுதிப்படி லைசென்ஸ் சேவையர் J. மனுவேலுவின் 22-3.53ல் பிளான் இலக்கம் 663ன் படிக்கு விளாத்திபபுலம் நி லா. 12ம 2 குளியும் வீடும், வான்பயிர் செய்பயிர்களும் அதைச் சேர்ந்தவைகளும, எல்லை கிழக்கு உசான சைபுக்குரிய ஆதனம வடக்கு அப்துல் அஸீஸ் பெண் அசும்யாக்கும் முஸ்லீம் சங்கத்துக்குமுரிய ஆதனம் மேற்கு றோட்டு, தெற்கு லொற் 4 மேறபடி பிளான்படி மீராமொகடின் சயிப் மொகமெட்கனி பெண் ஜமீலாக்குரிய ஆதனம், இது அடங்கலும்.

சி. சே மாரிமுத்து
கொமிஷனர், விலைமதிப்பாளர்
உத்தரவுபெற்ற ஏலதாரரும
விதானை வளவு, சத்தன்கேணி
2.6-72 131, 23-6-72

## லைப் அஷயூரென்ஸ் கோப்பறேசன் ஒப் இந்தியா

### அறிவித்தல்:

திரு. வேலாயுதம் சின்னத்துரை என்பவர் தமக்கு “ஓரியன்டல் கவர்மென்ட் ஸெக் யூரிடி லைப் அஷயூரென்ஸ் கம்பெனி, லிமிட்டெட்” அவர்களால் வழங்கப்பட்ட 1947431 என்னும் இலககத்தையுடைய பாலிசி தொலைந்து போயிற்றென்று எமக்கு அறிவித்துள்ளார் இன்றைய தேதியிலிருந்து ஒரு மாதகால எல்லைக்குள் ஆட்சேபனைகள் ஏதும் எங்களுக்கு கிடைக்காவிட்டால் அதே இலக்கத்தையுடைய வேறு பாலிசி கொடுககப்படும்.

R யேசுதாசன்
பொறுப்பு அதிகாரி
129, 23—6

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வழக்கு இல: C, / 409

1. சிவானந்தன் மகள கௌசலா 2. சிவானந்தன் மகன் சுதாகரன் ஆகிய மைனர்களின் விஷயததில்

கந்தையா சிவானந்தன் கைம்பெண் கனகேஸ்வரி 215 E, 2/7, அண்டஷன் கொலவ் லிங்த பிளாட்ஸ், நாறம்பிட்டியா கொழும்பு-5 விண்ணப்பதாரியும, பாதுகாவலரும், நம்பிககை பொறுப்பாளரும்

—வழக்காளி

எதிராக

1. சிவானந்தன் மகள் கௌசலா 2. சிவானந்தன் மகன் சுதாகரன் (இருவரும மைனர்) தமது பாதுகாவலி
3. வேலாயுதர் கந்தர் அல்லது மயிலவாகனம். அராலி வடக்கு, வட்டுககோட்டை. மறுதரப்பாளர்கள். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் C. 409ம் இலக்க வழக்கில் எனக்குக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிககப்படும் ஒரு துண்டுக்காணி 1972ம ஆடு ஆடி மாதம 29-ம் திகதி (29-7-72, சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம அந்தக காணிக்குள் நின்று பிரசித்த ஏலததில் விற்கபபடும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திரிக் வலிகாமம் மேற்கு வட்டுக்கோட்டை கோயிற்பறறு அராலி வடக்கு இறை “ காயட்டையாவத்தை,, நிலப்பரப்பு 5 ஆனல் உத்தரவு பெறற உலாந்தா S. முத்துக்குமாரசாமி 1964 ம ஆண்டு ஐப்பசி 20 ம் திகதி தயாரிக்கபபட்ட 2519 ம் இல. கொண்ட படததின்படி நிலப்பரப்பு 5 ம் குளி 3 ம இதிற்கு எல்லை கிழக்கு தருமலிங்கமும் பெண் உருத்திரநாயகியின் ஆதனம் வடக்கு எல்லை செகராஜசிங்கததின் மகள ஞான வாசியினதும் மறு பெயர்களையுடைய ஆதனம், மேற்கு பாலசுப்பிரமணியத்தின் கைமபெண பத்மாவதியின் ஆதனம தெற்கு பிரசித்த ஒழுங்கை. இது அடங்கலும். அதிலுள்ள பயிர்களும் மேற்கு எல்லையிலுள்ள கிணற்றில் பங்கும் அதற்குரிய வழிவாய்க்கால் உரிமைகளும், அதைச் சோந்தவைகளும்.

சி செ பாலசிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும

அராலிவடக்கு,
வட்டுக்கோட்டை, 12-6-72
128 23-6-72

## கோட்டு விறபனவு விளம்பரம்

கிருஷ்ணா கதிர்காமநாதன். சுளிபுரம். —வழக்காளி

வழகது இல: M B 10546 எதிராக

1. சுப்பிரமணியம் கந்தசாமியும பெண்
2. அன்னமமா இருவரும, சுளிபுரம். —எதிராளிகள்

யாழ்ப்பாணம டிஸ்திறிக கோட்டின M B 10546ம் இலக்க வழக்கில் எனககுக் கிடைதத கோட்டுக கட்டளைப்படி பினனல் விபரிக்கப்படும இருதுணடுககாணிகளை 1972ம ஆண்டு ஆடி மீ 5ம திகதி (5 7 72) புதனகிழமை முற்பகல் 10-00 மணி தொடககம் அந்தந்தக் காணிகளுககுள் நின்று பிரசுத்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைததொகை: முதல் வட்டி ரூபாய் 7,444/-ம், 18-1-69 தொடககம 12 -2—70 வரைக்கும் ரூபாய் 5,500/-க்கு 8 வீத வட்டியும் அதன்பின் முழுததொகைககும் இறுக்கும் வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 441-40 சதம்.

ஆதனங்களின் விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானை கோவிற்பற்று சுளிபுரம் இறை ‘மற்குததோட்டம்’ (Matkuththoddam, இதன் நிலப்பரப்பு 3ம, பனைகளும், செய்பயிர் வான்பயிர்களும் கிழக்கெல்லைக காணிக் கிணற்றில பங்கும, வழிவாய்க்கால பாவிப்புரிமையும், எல்லை கிழக்கு சின்னையா கைமபெண பத்தினிபபிள்ளையின் ஆதனம், வடக்கு மளவராயர் துரைச்சாமியின் ஆதனம, மேற்கு செல்லையா இலங்கைநாதனின் உரிமையாளர்களின் ஆதனம். தெற்கு ஒழுஙகை. இதடங்கலும. யாழ்ப்பாணத்தில் பதியப்பட்டது. E 261/273

2 ஷெ ‘ஓடைக்கலட்டி’ (Oddikkaladdy) இதன் நிலப்பரப்பு 4½ம, வீடும, செய்பயிர் வானபயிர்வகைகளும். சுப்பையா பெண் சிவபாக்கியததிற்குரிய வடஎல்லைக் காணிக்கிணற்றில் பங்கும, வழிவாய்க்கால் பாவிப்புரிமையும், எல்லை கிழக்கு சுப்பிரமணியம் கந்தசாமியின ஆதனம், வடக்கு சுப்பையா பெண் சிவபாககியத்தின் ஆதனம, மேற்கு ஒழுங்கை. தெற்கு கையொழுங்கையும், பெரியதம்பி கைம்பெண தங்கத்தின் ஆதனம், இதடஙகலும் யாழப்பாணத்தில் ப்தியப்பட்டது. E. 377/129

வே. கோபாலபிள்ளை
கொம்மிஷனர் & விலைமதிப்பாளர்

22. ஆஸ்பத்திரி வீதி,
யாழ்பபாணம். 25-5-72
130, 23—6 72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில்: வழ: இல. M. B. 9639

1. சபாபதிப்பிள்ளை அப்பாப்பிள்ளை சங்கானைகிழக்கு -வழக்காளி

எதிராக

1. செல்லப்பா குணரத்தினம் சங்கானை கிழக்கு —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M- B 9639 இலக்க வழக்கில எனச்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1972-ம ஸு ஆடி மீ 19ம உ (19-7-72) புதன்கிழமை முற்பகல் 10மணி தொடக்கம அந்தக் காணிக்குள நின்று என்னல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத தொகை:- முதல் வட்டி ரூபா 1850/-ம் 18-12-67 தொடக்கம் 27-1-70 வரைக்கும் ரூபாய் 1000 00 க்கு வருடம் ஒன்றுக்கு 10 வீத வட்டியும் அதன்பின முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை வருடம்ஒன்றுக்கு 5 வீத வட்டியும கோட்டுச் செலவு ரூபா 235-61 சதம.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேர்கு சங்கானை கோவிற்பற்று சங்கானை கிழககு இறை “Sathuthtakandam” பர. நில: இல 6. V, C. இதற்கு எல்லை கிழக்கு சபாபதி செல்ரைத்தினத்துக்கு உரிய ஆதனம். வடக்கும் தெற்கும் ஒழுங்கைகள் மேற்கு நாகமுத்து பொனனையாவுக்குரிய ஆதனம். இதடங்கலும், பதிவு இலக்கம் E 335/200, யாழ்ப்பாணம் காணி கந்தோர்.

ப. நா தருமலிங்கம்
கொமிஷனரும், விலைமதிப்பாளரும்.

167/1 கோவில் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
14-6.72
எம். 125 23 6–72

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டு

சதாசிவம் கந்தையா செட்டித்தெரு நல்லூர் யாழ்ப்பாணம்

இல M B 11381 எதிராக —வழக்காளி

1. சின்னத்தம்பி மார்க்கண்டு 91/1 ஸ்ரான்லிவீதி யாழ்ப்பாணம்
2. கந்தையா குமாரசாமி செட்டித்தெரு நல்லூர் யாழபபாணம்

—எதிராளிகள்

யாழ்ப்பாணம் மாவட்டக் கோட்டின் M B 11381-ம இலக்க வழக்கில் எனககுக கிடைத்த கட்டளைப்படி கீழே விபரிக்கபபடும ஆதனம 1972-ம ஸு ஆடி மீ 26-ம் திகதி (26-7-72) புதன் கிழமை காலை 9-30 மணியளவில அக்காணிககுள் நின்றுபிரசித்த ஏலத்தில் என்னல் விற்கப்படும்.

தீர்வைத தொகை:- முதலும் வட்டியும் 16 670/- ரூபா இன்னும் 10000/- ரூபாவிற்கு 17-1-1970 6 6-1970 வரைககும் 12 வீத வட்டியும கூட்டிக்கண்ட தொகைக்கு 6-6-1970 தொடக்கம் முழுப் பணம் இறுககுமவரைக்கும் 5 வீத வட்டியுங் கோட்டுச் செலவு 435-56 சதமும். (ஏற்பட்ட செலவு 303-41 வெலிபாத்துச் செலவு 86-38 இனிமேலேற்படுஞ் செலவு 45-77.)

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டமும் பிரிவும் சுண்டிக் குளிக் கோவிற்பற்று சிவியாதெரு இறை ‘மதிப்பன் குளத்திற்குத் தெற்கு வயல். மதிப்பன்குளத தெருவிற்குத தெற்குவயலும் மதிப்பன குளத்து வயலும” பர, நெல். லா. 113½ இதில் மேற்குப் பக்கமாக நிந்தயாக சீதனங் கொடுத்த பர. நெல். லா. 12. குளி 5ம போக மிகுதிப் பர. நெல. லா, 100 குளி 10 நிந்தயாக எல்லை கிழக்கு தெரு வடக்கு கண்டிறோட்டு மேற்கு முருகேசு வேலாயுதம பெண சந்திராதேவிக்குரியவாதனம்; தெற்கு K. தங்கம்மாவனுதனம் பதிவு D 307/104.

தா. க. பொன்னுத்துரை J. P.
கொமிசனரும் விலைமதிப்பாளரும்,

“அகிலகம்”
28/1 யாழ் வீதி, யாழ்ப்பாணம்.
14—6 - 72
எம். 132, 23 – 6-

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

1. குமாரசாமி விசயரத்தினம்
2. அப்புத்துரை தங்கராசா
3. பெண் சீதாலெட்சுமி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

இல: M B 10077 எதிராக —வழக்காளிகள்

1. சினனத்தமபி சுந்தரம், நல்லூர், யாழ்ப்பாணம்.

—எதிராளிகள்

யாழப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 10077-ம் இலக்க வழககில் எனக்குக கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிககப்படும் ஒரு துண்டுக் காணியை 1972-ம் ஆண்டு ஆடி மாதம 21-ம் திகதி ( 21-7-72 ) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் எனனல விறகப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4900-00, 13-6-68 தொடக்கம் 17—4—69 வரைக்கும் ரூபாய் 4000-00க்கு வருடம் ஒன்றுக்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை வருடம் ஒனறுக்கு 5 வீத வடடியும் கோட்டுச்செலவு ரூபாய் 271 35 சதம்

ஆதன விபரம

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் நல்லூர் கோவிற்பற்று திருநெலவேலி இறை ‘செல்லையன்குளம & இரட்டைப் பனையடி’ பர நில. இலா 5 (V. C) ½ குளி. இக்காணிக்கு தெற்குப் பக்கமாக உள்ள பிரிவிடப்பட்ட பர. நில. இலா. 3 (V C ) ½ குளி செய்பயிர்வான்பயிர்களும். வடக்கு எல்லைக்கு வடககேயுளள ஒழுங்கையில் பங்கும, இதற்கு எல்லை கிழககு தண்ணீர் பாயும் வாய்க்கால், வடக்கு வேலன் சின்னத்தம்பிக்குரிய ஆதனமும், பெண் சின்னம்மாவுக்கும், மேற்கு சிற்றம்பலம் பெண இராசம்மாவுக்கும் பங்காளருககுமுரிய ஆதனம், தெற்கு இளையவி செல்லருக்குரிய ஆதனம், பதிவு இல: D, 182/218

ப. நா தருமலிங்கம்
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்

167/1, கோவில் வீதி,
நல்லூர் வடக்கு,
யாழப்பாணம், 14-6-72.
எம் 126 23.6.

## சுவைக்கச் செய்யுள்செய்த
# துரையப்பாபிள்ளை

(1- ஆம் பக்கத்தின் வளர்ச்சி)

"சித்திரமும் கைப்பழக்கம் செந்தமிழு நாப்பழக்கம்
வைத்ததோரு கல்வி மனப்பழக்கம் — நித்தம்
நடையும் நடைப்பழக்கம் நட்புந் தயையும்
கொடையும் பிறவிக் குணம்"

என்று அறம் உரைத்த ஒளவைப் பிராட்டியின் அரிய கருத்துக்களமைந்தவர் துரையப்பாபிள்ளை, அன்னருக்கு வாழ்க்கைச் சித்திரம் வகையான கைப்பழக்க ஓவியம்; திநதமிழோ சேர்ந்த நாப்பழக்கம், வைப்புப்பொருளாகிய கல்வி எப்பொழுதுமுள்ள மனப்பழக்கம். நேர்மை நடை நித்திய நடைப் பழக்கம்; இவற்றால் இப்பாக எழுந்த பெரியோர் நட்பும உரிய தயையும் எழுத்தறிவிக்கும் கொடையும் பிள்ளையவர்களுக்குப் பிறவிக்குணம் என்க.

மக்கட் பேற்றை மாநிலம் போற்றும்; பிள்ளையவர்கள் பிள்ளைப்பேறு இருவகைத்து, மணமாட்சியில் வந்த மகப்பேறு, கல்விக்கழகு இல்லறத்தால் இயைந்த மக்கட்பேறு. பிள்ளையவர்கள் இந்தப் பேருண்மையை உணர்ந்து தாம் நிறுவிய கல்வி நிலையத்தை 'மகாசன' (மக்கள்) கல்லூரியென மகத்தான நாமமிட்டழைத்தனர்.

**நாவலர் நல்வழி நயந்த பெரும் பண்பு**

அவையத்து முந்தியிருப்ப அருங் கலைவினோதர்களாகக் கலைமாணிகளாக மைந்தரைத்தந்த பிள்ளையவர்கள் வாழ்க்கை அவையத்தில் முன்னிற்க மகாசனக் கலவிபயின்ற மக்களையும் உலகிற் குவந்தனர்.

சொல்லியவண்ணம் செயல் அரிது. இவ்வரிய வினைத்திறன் இவருக்கு பொருந்தியது. நாடு நயம்பெற நற்றொண்டாற்றிய நாவலர் சொல்லியவற்றைப் பிள்ளையவர்கள் தொடர்ந்து சொல்லிய தோடமையாது சைவமும் தமிழும் வளர்த்த பெருமை இவருக்குரிய பெரும்பண்பு.

தாமின்புறு வது லகின் புறக் கண்டு கற்றறிந்தார் காமுறுவர் எனருங்கு பிள்ளையவர்களின் அறிவுச்செறிவு சிந்தனைச்செழும் புனலாகிச் செய்புள் நீரூற்றுகி வெளிபபோந்தமையை அவர்களியற்றிய நற்கவியில நனிகாண்கின்றும். ஆங்கிலமும, செந்தமிழும் பாங்கமையும் பாக்களைப பாடி மகிழ்ச்சியுற்றனர். அழுதம் திருத்தமாக எழுதுக்கலை நயதுடன கட்டுரைகள பல வரைந்தனர். ஈழத்துச் சைவமக்களின் ஏடு ஆக நறறகையார் நாவலரின பொற்பமைந்த சைவபரிபாலனசபை வெளியீடாகிய ஆங்கில 'இந்துசாதன'த்தின் ஆசிரியர் குழுவில் அமர்ந்து அரிய உரைகளை யாவரும மெச்ச எழுதி வந்தனர். கௌரவ அ. சபாபதி அவர்கள் காலத்தில.

சுருங்கச் சொல்லும்பொழுது அருங்கலை விநோதனுய் மதய மொழி வளர்த்துதவிய தலைவராய்க் கல்விகொடைவள்ளலாக

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

சீனிமுத்து கைம்பெண் மகாலெட்சுமி, பண்ணாகம் தெற்கு, சுளிபுரம். —வழக்காளி

வழ. இல: M B 11946 எதிராக

நாகேசு பாலசிங்கம், சுளிபுரம். — எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 11946ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பினனுல விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணி 1972-ம் ஆண்டு ஆடி மீ 19-ம் திகதி (19—7—72) புதன்கிழமை முற்பகல் 11 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னுல பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல் வட்டி ரூபாய் 4145/-ம், 20-8-70 தொடக்கம் 6—4—1971 வரைக்கும் ரூபாய் 2500/-கு 10வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும் வரை 5வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 373-70

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் மேற்குப் பகுதி சங்கானைக் கோவிற்பற்று சுளிபுரம் இறை 'தச்சன தோட்டம்' நிலப்பரப்பு (6) ஆறும், கிணறும், செய்பயிர் வான் பயிர்களும், எல்லை கிழக்கு பெரியார் நவசருக்கும் பங்காளிகளுக்கும் சொந்தமான ஆதனம, வடக்கு இராசையாவின் மனைவி பொன்னம்மாவின் ஆதனம், மேற்கு பெரியார் நாகேசுவினதும் முத்தப்பு சின்னத்தம்பியினதும் பங்காளரினதும் ஆதனங்கள். தெற்கு ஒழுங்கை, இதடங்கலும். பதிவு ஈ. 34/296

கலைமணி பொ. செல்வக்குமாரசுவாமி
கொமிஷனர், விலைமதிப்பாளர்

"கலை இல்லம்"
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. 10-6-72

134. 23—6

---

**வான்முகில் வழாதுபெய்க, மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்**

---

யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறைவீதி 450-ம் இலக்கத்திலுள்ள சைவப்பிரகாச யந்திரசாலையில்; 2 ம் நம் இரண்டாமொழுங்கை பிறவுன் வீதியில் வசிக்கும் திரு. மு. மயில்வாகனம் அவர்களால் 23—6—1972 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

பத்திராதிபர்; திரு. மு. மயில்வாகனம் அவர்கள்

## திருமுறைவிழா

1ம் பக்கத்து வளர்ச்சி

மணியம் அவர்கள் தலைமையில் நடைபெறும்,

ஓதுவார்மூர்த்தி யவர்களிடம பாடங்கேட்ட மாணவ மாணவிகளுடைய திருமுறை யோதலும், பண்டிதமணி ந. சுப்பையாபிள்ளை, வியாகரண சிரோமணி தி. க சீதாராமசாஸ்திரி, பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி முதலியவர்களுடைய சிறப்புச் சொற்பொழிவுகளும ஆகிய நிகழ்ச்சிகளில் இடம்பெறும்.

திருமுறைப் பண்ணிசைப் பயிற்சிக் குழுவினரும், யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபையாரும் பாராட்டில் கலந்து கொள்வார்கள்

—0—

---

நாவலர் நற்றகையார், இராமநாத ஏந்தல் மழவராய மாமகன் வரிசையில் உரிமையுடன் விளங்கும பரோபகாரியாய்த் தெல்லிமாநகர்த் திருவாளர் தெ. அ. துரையப்பாபிள்ளையின் தூயநாமம் தொடர்ந்து தொல்லுலகில் இயங்கும் என்க.

மக்கள் வளம்பெற வாழ்க்கை
வழிவகுத்து
மக்கள் கலைக்கழகம்
வைத்தருளி — மிக்க
குணபுரிந்த தூயோன்
துரையப்பா பிள்ளைக்
கிணையரி தென்னே எழில்.

---

**வண்ணை. வைத்தீஸ்வரன் — நயினை. நாகபூஷணியம்மை**

### பாதயாத்திரை

1-ம் பக்கத்து வளர்ச்சி)

5 மணிக்கு மேற்படி பஜனைப்பாதயாத்திரை தேவஸ்தானத்திருந்து ஆரமபமாகிகாங்கேசன துறைவீதி குறிகட்டுவான்வீதிவழியாக மண்தும்பான் பிள்ளையார் தேவஸ்தானத்தை இரவு 8 மணிக்குசேர்வர். வெள்ளிகிழமைஅதிகாலை 4மணி சகுப் பாதயாத்திரை ஆரம்பமாகி மண்கும்பான் பிரதானவீதி வழியாக வேலணையையடைந்து இலைப்பாறி மாலை 5 மணிக்கு மீண்டும் யாத்திரை ஆரம்பமாகி குறிகட்டுவான்வீதிமார்க்கமாக மோட்டார் படகு வழியாக நயினாதீவை காலை 9 மணிவரை சேர்வார்கள், அடியார்கள் யாவரும் ஆங்காங்கு வரவேற்று உபசரிப்பா.

---

நயினை - ஸ்ரீ நாகபூஷணியம்மை
ஞாயிறு 25-6-72 தேர்
திங்கள் தீர்த்தம் செவ்வாய
தெப்போற்சவம்.

---

### இரதோற்சவம்

வண். மேற்கு, விசுவேசப்பிள்ளையார் கோவில் இரதோற்சவம் 25ம் திகதி ஞாயிறுகிழமை நடைபெறும்.

### நெல் கொள்வனவு

இலங்கை நெல் கொள்வனவுச் சபை கடந்த ஒருமாத காலத்தில ஒரு கோடி 39 இலட்சத்து 43 ஆயிரத்து 417 புசல் நெல்லை விவசாயிகளிடமிருந்து கொள்வனவு செய்துள்ளது.

### இலங்கையில் உற்பத்தியாகும்

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் வேண்டுகோளுக் கிணங்க இலங்கையில் பஸ் வண்டிகளை உற்பத்தி செய்வதற்குப் பல நாடுகள் முன்வந்துள்ளன.

## Commission Sale
## கோட்டுக்கொம்மிஷன் விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டில் வழ இல:11217

பருத்தித்துறை, தும்பளை, இராமு சிதம்பரநாதன் —வழக்காளி

எதிராக

பருத்தித்துறை, வராத்துப்பளை. வேலன் மாணிக்கன் – எதிராளி

மேற்குறித்த இலக்க வழக்கில் தீர்ந்த தீர்வைப்படியும் குறித்த கோட்டால் எமக்குக் கிடைத்த கொமிஷன் அதிகாரப்படியும் இதன்கீழ் விபரிக்கப்படும் ஆதனத்தை 1972ம் ஆ ஆவணி மீ 26 ம் திகதி (26-8-72) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் குறித்த ஆதனங்களிடமாக விருந்து என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்,

**ஆதனங்களின் விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வடமராட்சிப்பகுதி பருத்தித்துறைக் கோயிற்பற்று,

1. வராத்துப்பளை இறை மாத்திரங் கட்டுவன் நில பர 16,1/2 இதற்கு மேற்கூறிய 486 ம இலக்கப் பிரிவிடல் வழக்கோடணைக்கப் பட்டதும் உலாந்தாமேஸ்தர் T சுப்பிரமணியத்தால் 1959 ம ஆ கார்த்திகை மீ 22 ந் திகதி 2097 ம் இலக்கத்தில் விநதாரிககபபட்டதுமாகிய படத்தின்படி நி. பர. 16 குளி 8 25/32 இதில் குறித்த படத்தில் 4-ம் நம்பர்த் துண்டுக்கு நில பர 6 குளி 7. 26/32 பனைகள் புளிகள் வேம்புகள் சவுக்க மரங்களும் எலலை கிழக்குந் தெற்கும் ஒழுங்கை. வடக்கு குறித்த படத்தில் 5-ம் நம்பர்த்துண்டு, மேற்கு குறித்த படததில் 3-ம் நம்பர்த்துண்டு. இவ்வெல்லைக்குட் பட்டவைகள அடங்கலும், இன்னும் குறித்த படத்தில் 5 ம் நம்பர்த் துண்டில் இதற்குரிய பங்கும் வழிவாய்க் காலுரித்தும்

2. ஷெயிறை பூவாரிவளவு நில பர 4 குளி 3 புளி கிணறும் எல்லைகிழக்கு வேலுப்பிள்ளை பெண் வேலாசிக்கும் மறுபேருக்குரிய வாதனம், வடக்கு ஒழுங்கை. மேற்கு கந்தையா கைம்பெண் செல்லமுத்துவுக்கும் மறுபேருக்குரிய வாதனம, தெற்கு நீக்கிலான் அருளப்புவுக்கும் மறுபேருக்குரிய வாதனமும் கவுரியல் மனுவேலுக்கும் மறுபேருக்குரிய வாதனமும் இவ்வெல்லைக்குட்பட்ட நிலம் புளி கிணறு மற்றும் அடங்கலிற் சொரியலால் எட்டில் ஆறுபங்கும்.

| | | |
|---|---|---|
| வழக்குவைத்த திகதியில் 21-1-1971 ல் கொடுக்க வேண்டிய தொகை ரூபா | 4550 | 00 |
| ரூபா 2500/- க்கு 21-1-1971 தொடக்கம் வழக்குத் தீர்வைத்திகதி 24-7-1971 வரை 9 வீத வட்டி | 112 | 50 |
| 24-7-1971 ல் கொடுக்கவேண்டிய முழுத்தொகை | 4662 | 50 |
| 24-7-71 தொடக்கம் 24-6-72 வரை ரூபா 4662-50 க்கு வட்டி | 213 | 60 |
| 24-6-72 ல் கொடுக்கவேண்டிய முழுத்தொகை | 4876 | 10 |
| மேலதிக கோட்டுச் செலவு ரூபா 282-64 சதம் அதில் எதிராளி கொடுத்த ரூபா 100-00 கழித்து | 182 | 64 |
| | 5058 | 74 |

விற்பனவு 24-6-72 க்கு பின் நடப்பதால் ரூபா 4876/- க்கு 24-6-72 தொடக்கம் விற்பனவுத் திகதி 26-8-72 வரை 5 வீத வட்டி அறவிடப்படும்-

கோட்டால் ஏற்கப்பட்ட மதிப்புத்தொகை ரூபா 5750/- முதலாம் காணிக்கு. ரூபா 1800/- இரண்டாம் காணிக்கு.

R. S. இராமநாதன்
"உமாபதி" கொம்மிசனரும், விலைமதிப்பாளரும்
நெல்லண்டை ரோட்டு, ஏல விற்பனையாளரும்
தும்பளை, பருத்தித்துறை. 8-6-72 எம. 119. 23—72

---

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்டம் நீதிமன்றம்

கணபதிப்பிள்ளை முருகர், காரைநகர் கிழக்கு
(காலம சென்ற கணபதிப்பிளளை கதிர்காமுவின் சொத்துக்குச் சட்டப்படி நியமிக்கப்பட்ட பிரதிநிதி) —வழக்காளி

இல. M B 5580 எதிராக

சீனிவாசகம் நாராயணசாமியின் கைம்பெண் லெட்சுமியம்மாள், 156 கஸ்தூரியார் ரோட் யாழ்ப்பாணம். —எதிராளி

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M B 5580 ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணி 1972-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ந் திகதி (12-7-72) புதன்கிழமை முற்பகல் 10-00 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னுல் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 5800 24-4-63 தொடக்கம் 21-1.1967 வரைக்கும ரூபா 4000/- க்கு 12 வீத வட்டியும் அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 282 57 இதில்க் கழிவு ரூபா 150/-

**ஆதன விபரம்**

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் யாழ்ப்பாணப்பிரிவு வண்ணார்பண்ணை கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை பனங்காடு' பதிவு இல D 161/75 நிலப்பரப்பு 4-ம் குளி 6 ½ இதில் தென் பககததிலுள்ள பிரிக்கப்பட்ட நில பர 2 ம் கட்டப்படும் புதிய கல்வீடும் வான்பயிர் வளர்பயிர்களும் அதனைச் சார்ந்தவைகளும் எல்லைகள கிழக்கு ஒழுங்கை, வடக்கு, மிகுதிப்பாகம் ஆறுமுகம் கைம்பெண் பாக்கியத்தின் ஆதனம். மேற்கு சபாபதியின் கைம்பெண் வள்ளியம்மையின் ஆதனமும், பங்குதாரர்களினதும் வைத்திலிங்கம் கணபதிப்பிள்ளை அவர்களின் உரிமை ஆதனமும் தெற்கு கைஒழுங்கை பதிவு இல. D 268/214

க. சிவஸ்கந்தா
நாகேந்திரமடம், நீதிமன்ற விற்பனை ஆணையாளரும்,
வட்டுக்கோட்டை. 5-6-72 மதிப்பாளரும்
137 23—6—72